# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்து

- இந்திய அரசியலமைப்பில் உறுப்பு 1-ன் மூலம் ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஓர் அங்கமே.
- சரத்து 370 மற்றும் பகுதி 21-ன்படி ஜம்மு காஷ்மீருக்குச் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய அரசியலமைப்பின்படி நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் அனைத்துச் சட்டங்களும் ஜம்மு காஷ்மீருக்குப் பொருந்தாது.
- இந்திய மாநிலங்களில் தனி அரசியலமைப்பைக் கொண்ட ஒரே மாநிலம்.

**இந்தியா மற்றும் ஜம்மு காஷ்மீர் உறவுகள் :**

1. ஜம்மு காஷ்மீர் இந்திய ஒன்றித்தின் ஒரு பகுதி என்று பகுதி 1 மற்றும் அட்டவணை 1 மூலம் தெளிவாகிறது. ஆயினும் ஜம்மு காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத்தின் ஒப்புதலின்றி அதன் எல்லை மற்றும் அதன் பெயர் மாற்றத்தைப் பாராளுமன்றம் மேற்கொள்ள இயலாது.
2. ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பொறுத்தவரை மாநிலப்பட்டியலில் உள்ள எந்தத் தலைப்பின் மீதும் பாராளுமன்றம் சட்டமியற்ற இயலாது.
3. மூன்று பட்டியல்களிலும் குறிப்பிட்ட எஞ்சிய அதிகாரம் மாநில அரசாங்கத்திடம் உள்ளது. மற்ற மாநிலத்தைப் பொறுத்தவரை இவ்வதிகாரம் பாராளுமன்றத்தில் உள்ளது.
4. பாராளுமன்றம் இயற்றும் தடுப்புக் காவல் தடுப்புச் சட்டங்கள் ஜம்மு காஷ்மீருக்குத் தானாகவே பொருந்தாது. அத்தகைய சட்டங்கள் அம்மாநிலச் சட்டமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னரே செல்லத்தக்கவை.
5. சொத்துரிமை இந்திய அரசியலமைப்பில் சாதாரண சட்ட உரிமையாக உள்ளது. (300A பகுதி XII) (44வது சட்டதிருத்தம் 1978). ஆனால் ஜம்மு காஷ்மீரில் அடிப்படை உரிமையாகவே நடைமுறையில் உள்ளது. அதுபோலவே அங்கு சொத்துகளை வாங்கவும் விற்கவும் ஜம்மு காஷ்மீர் மாநிலப் பிரஜைகளுக்கு மட்டுமே உரிமையுண்டு
6. இந்திய அரசியலமைப்பின் பகுதி IV மற்றும் IVA சொல்லப்பட்டுள்ள அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் கோட்பாடுகள் மற்றும் அடிப்படைக் கடமைகள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைக் கட்டுப்படுத்தாது.
7. தேசிய நெருக்கடி நிலையைப் பொறுத்தவரை போர் அல்லது அயல்நாட்டு ஆக்கிரமிப்பு காரணமாக மட்டும் ஜம்மு காஷ்மீரில் பிரகடனப்படுத்த இயலும். ஆயுதமேந்திய உள்நாட்டுக்

கலவரம் காரணமாகக் கொண்டு வரப்படும் நெருக்கடி நிலையை ஜம்மு காஷ்மீரில் பிரகடனப்படுத்த இயலாது.

8. ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு நிதி நெருக்கடி நிலையை ஜனாதிபதி அறிவிக்க இயலாது.
9. மாநில நெருக்கடியை ஜம்மு காஷ்மீருக்கு அமல்படுத்தலாம். ஆயினும் ஜம்மு காஷ்மீர் அரசியலமைப்பை மீறப்பட்டதாக மட்டும் இருக்க வேண்டும். (இந்திய அரசியலமைப்பை அல்ல)
10. இரண்டு வகையிலான மாநில நெருக்கடி உள்ளது. இந்திய அரசியலமைப்புப்படி ஜனாதிபதி ஆட்சியும் மாநில அரசியலமைப்புப்படி ஆளுநர் ஆட்சியும் அமல்படுத்தலாம்.
11. சர்வதேச உடன்பாடுகள் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தொடர்புடையது எனில் அம்மாநிலத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.
12. இந்திய அரசியலமைப்பில் கொண்டு வரப்படும் சட்டத்திருத்தம் குடியரசுத் தலைவர் கட்டளை இல்லையென்றால் பொருந்தாது.
13. இந்திய அரசியலமைப்பின் அட்டவணைப் பகுதி V மற்றும் VI ஜம்மு காஷ்மீருக்கு பொருந்தாது
14. உச்ச நீதிமன்றம்/மத்தியத் தேர்தல் ஆணையம் தலைமைத் தணிக்கை அதிகாரி போன்றவர்களின் சட்டவரையறை ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்குப் பொருந்தும்.
15. ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மட்டும் அமலாக்கம் செய்யப்படும்.
16. பகுதியின்படி ஜம்மு காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானுக்குக் குடிபெயர்ந்தால் ஜம்மு காஷ்மீர் நிரந்தரக் குடியுரிமை மறுக்கப்படுகிறது. ஆனால் மறுபடியும் ஜம்மு காஷ்மீருக்குத் திரும்பினால் இந்திய குடியுரிமை வழங்கப்படுகிறது.
17. மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தன்னிச்சை அதிகாரம் அதிகம் கொண்ட மாநிலம் மத்திய அரசின் சட்டவரையறையைக் கட்டுப்படுத்தப்படுகிறது.

**ஜம்மு காஷ்மீர் உறவுகள்**

1. ஜம்மு காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாகும்.
2. சமூகநீதி, பொதுவுடைமை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஜம்மு காஷ்மீரில் நெறிப்படுத்தப்படுகிறது.
3. ஜம்மு காஷ்மீரின் எல்லைகள் ஆகஸ்ட் 15, 1947ல் வரையறுக்கப்பட்டதாகும்.
4. ஜம்மு காஷ்மீரில் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர் (14 மே 1954) மாநிலத்தின் வகுப்பு I அல்லது வகுப்பு II க்கு உட்பட்டவர்கள்
   - சொத்துகளை வைத்திருத்திருத்தல் வேண்டும்.

- வகுப்பு I அல்லது வகுப்பு I I சார்ந்தவர்கள் மே 14 1954ல் குடிபெயர்ந்து பாகிஸ்தானுக்கு சென்று மார்ச் 1, 1957க்குள் திரும்ப வந்தவர்களுக்கு வழங்கப்படும்.இம்மாநிலத்தின் நிரந்தரக் குடியுரிமை பெற்ற அனைவருக்கும் இந்திய அரசியலமைப்பின் படி அனைத்து உரிமைகளும் வழங்கப்படுகின்றன.

5. இம்மாநிலத்தின் நிரந்தரக் குடியுரிமை பெற்ற அனைவருக்கும் இந்திய அரசியலமைப்பின் படி அனைத்து உரிமைகளும் வழங்கப்படுகின்றன.
6. ஆனால் நிரந்தரக் குடிமகன் வரையறை செய்யும் அதிகாரம் மாநில அரசாங்கத்திடமே உள்ளது.
7. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள் மாநில அரசின் அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆயினும் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல இயலாது.
8. மாநிலச் சட்டமன்றம் இரு அவைகளைக் கொண்டுள்ள சட்டமன்ற கீழவையில் 100 (24 இடங்கள் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு இடங்களில் உள்ளது) மேலவையில் 26 இடங்கள் உள்ளது.
9. உயர் நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதி மற்றும் இரண்டுக்கு மேற்பட்ட நீதிபதிகளை ஜனாதிபதி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி மற்றும் ஆளுநரிடம் கலந்து ஆலோசித்து நியமனம் செய்கிறார். உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமையின் நீதிப்பேராணையை மட்டும் அமலாக்கம் செய்ய முடியும்.
10. மாநில அரசாங்கம் ஜம்மு காஷ்மீரின் அரசியலமைப்பை மீறினால் மட்டும் ஆளுநர் ஆட்சி இந்திய அரசியலமைப்பை மீறினால் ஜனாதிபதியின் ஆட்சி நடைமுறைப்படுத்தப்படும் (முதல் முறையாக 1977)
11. உருது மாநில மொழியாகவும், ஆங்கிலம் அலுவலக மொழியாகவும் உள்ளது.
12. சட்டத் திருத்த மசோதா சட்டமன்ற கீழவையில் மட்டுமே அறிமுகப்படுத்த வேண்டும் மற்றும் இரு அவைகளிலும் 2/3 பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும். ஆனால் இந்தியா காஷ்மீர் உறவுகள் தொடர்பான சட்டத் திருத்த மசோதா கொண்டுவர இயலாது.

## ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து - உறுப்பு 370வது பிரிவு ரத்து

1. ஜம்மு – காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த 370வது சட்டப்பிரிவை நீக்கி குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், 2019 ஆகஸ்டு 5ம் தேதி உத்தரவு பிறப்பித்தார்.
2. அந்த மாநிலம் ஜம்மு–காஷ்மீர் மற்றும் லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகின்றன.

### அரசியல் அமைப்பு - உறுப்பு 370

- அரசியல் சாசனத்தின், 21வது பிரிவு, ‘தற்காலிக மாற்று ஏற்பாடு மற்றும் சிறப்பு பிரிவுகள்’ குறித்து விவாதிக்கிறது.

- அதன்படி 1947 அக்டோபர் 27-ல், இந்தியாவுடன் இணைவதற்கான ஒப்பந்தத்தில், மஹாராஜா ஹரிசிங் கையெழுத்திட்டபோது, ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கப்படும் என கூறப்பட்டது.
- ஆனால் அந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தபோது 370வது பிரிவு சேர்க்கப்படவில்லை.
- அரசியல் சாசனத்தின் வரைவை உருவாக்கும் குழுவில் இருந்த, ஷேக் அப்துல்லாவின் முயற்சியால், இது 1949 அக்டோபரில் சேர்க்கப்பட்டு, 1952ல்தான் நடைமுறைக்கு வந்தது.

3. தற்போது அந்தச் சட்டப்பிரிவு நீக்கப்பட்டுள்ளதால் 106 மத்திய சட்டங்கள், ஜம்மு-காஷ்மீருக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.
4. முக்கியமாக ஊழல் தடுப்புச்சட்டம், நிலம் கையகப்படுத்தும் சட்டம், தேசிய சிறுபான்மையினர் சட்டம், கல்வி உரிமை சட்டம், உள்ளாட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டங்கள், இனி அங்கு அமலுக்கு வரும்.
5. அரசியல் சாசனத்தின், 35-ஏ பிரிவு இது செல்லாது. இதன் மூலம் அங்கு பெண்களுக்கு எதிரான பாகுபாடு ஈர்க்கப்பட்டுள்ளது. இனி வேறு மாநிலத்தவரை திருமணம் செய்தாலும், சொத்துக்கள் வாங்க முடியும். தங்களின் குழந்தைகளுக்கும் மாற்ற முடியும்.

## வினாக்கள்

1. சரத்து 370 ரத்து செய்வதற்கு முன்பு இந்தியா மற்றும் ஜம்மு காஷ்மீரின் உறவை பற்றி விளக்குக.
2. சரத்து 370 ரத்து பற்றி விவரித்து எழுதுக.